# IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM

| MCOP No. 53/2024 | நாள் – 03.02.2026 | சாட்சி – ம.சா.1 |
|---|---|---|

**திரு. உத்திராபதி, த/பெ. திருவேங்கடம்**

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து தேதியன்று நான் சாலியமங்கலம் பாபநாசம் சாலையில் சென்றேன் என்றால் சரிதான். விபத்து நடந்த நேரம் எப்போது என்றால் சாயங்காலம் 7.30 மணி இருக்கும். அப்போது இருட்டாக இருந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் இருந்து எனது வீடு எவ்வளவு தூரம் என்றால் 6 கி.மீ. இருக்கும். எனக்கு வயது 70 இருக்கும் என்றால் 60 வயது. காவல் துறையில் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரில் எனக்கு வயது 67 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.2 மற்றும் 3 ஆகிய இரண்டு விபத்து பதிவேடுகளில் எனது வயது 67 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மாவுக்கட்டு போட்டார்கள். கும்பகோணம் அரசு மருத்துவமனையில் நான் 5 நாட்கள் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தேன் என்றால் சரிதான். 16.11.2023ல் நான் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட பிறகு மேற்கொண்டு சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வயது முதிர்வின் காரணமாக 6 கி.மீ. சைக்கிளில் சென்று நிலை தடுமாறு சாலையின் குறுக்கே சென்று விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. எனது வேலை மற்றும் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பின்புறம் வந்து மோதியதாக கூறும் வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால்

தெரியவில்லை. விபத்திற்கு முழு காரணம் நான் தான் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும், விபத்தானது எனது கவனக்குறைவால் நடந்தது என்பதாலும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. மனுவில் குறிப்பிட்டவாறு எனக்கு ஊனமோ உபாதைகளோ இல்லை என்றால் சரியல்ல. நான் வேலை வருமானம் இல்லை என்பதால் தான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ரூ.2,50,000/– மருத்துவ செலவு செய்ததாக சொல்லியிருக்கும் பட்சத்தில் அதற்கான எவ்வித ஆவணங்களும் தாக்க்ல செய்யவில்லை என்றால் சரியல்ல. அது மனுவிற்காக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் எனது மகன் வீட்டில் இருக்கிறேனா என்றால் தனியாக இருக்கிறேன். எனக்கு எவ்வித வேலையும் இல்லை என்றாலும், எனது மகனை சார்ந்து இருக்கிறேன் என்றாலும் மனுவிற்காக நான் தனியாக வசித்து வருகிறேன் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் ஊனத்தின் தன்மை குறைய வாய்ப்புள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.02.03 18:03:07 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*